| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | செய்தி ஆசிரியர்,<br>அனைத்து செய்தி ஊடகங்கள். |

**ந.க.எண். 052449/பி1/2019** **நாள் : 09.05.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 ஜுன் 2019 பத்தாம் வகுப்பு சிறப்புத் துணைப் பொதுத் தேர்விற்கு இத்துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களில் விண்ணப்பிக்க தவறிய தேர்வர்கள் சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தட்கல்) விண்ணப்பித்தல் தொடர்பான செய்தி குறிப்பு வெளியிட கோருதல் – சார்பு.

*****

நடைபெறவுள்ள ஜுன் 2019 பத்தாம் வகுப்பு சிறப்புத் துணைப் பொதுத் தேர்வெழுத, விண்ணப்பிக்கத் தவறிய தகுதியுள்ள தனித்தேர்வர்கள் சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தட்கல்) சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வு சேவை மையங்கள் / முதன்மைக் கல்வி அலுவலகம் வழியாக ஆன்–லைனில் விண்ணப்பித்தல் தொடர்பான **''செய்திக் குறிப்பு''** இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வகையில் தங்கள் பத்திரிக்கையில் செய்தியாக வெளியிடுமாறும் மற்றும் தொலைக்காட்சியில் ஒலி/ஒளி பரப்பிடுமாறும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

''**இது விளம்பரம் அல்ல**'' எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
**இயக்குநர்**

**<u>இணைப்பு</u>**
செய்திக்குறிப்பு

**<u>நகல்</u>**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   – தங்கள் ஆளுகைக்குட்பட்ட அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கி, சிறப்பு அனுமதி (துக்கல்) திட்டத்தின் கீழ் மாணவர்களை அனுமதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. அனைத்து அரசுத் தேர்வுகள் மாவட்ட உதவி இயக்குநர்கள் – மேற்படி விவரத்தினை தங்கள் உள்ளூர் செய்தித்தாட்களில் செய்தியாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–600 006</u>**

**<u>ஜூன் 2019, பத்தாம் வகுப்பு சிறப்புத் துணைப் பொதுத்தேர்வு, தேர்வுத்துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தட்கல்) விண்ணப்பிக்கும் நாட்கள் குறித்த செய்திக் குறிப்பு</u>**

**<u>1. மார்ச் 2019 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் தட்கல் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தல் :</u>**

மார்ச் 2019 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கத் தவறிய தனித்தேர்வர்கள் (ஏற்கனவே அறிவியல் பாட செய்முறை பயிற்சி பெற்றவர்கள்), நடைபெறவுள்ள ஜூன் 2019 சிறப்பு துணைப் பொதுத் தேர்வெழுத **08.04.2019 (திங்கட் கிழமை) முதல் 12.04.2019 (வெள்ளிக் கிழமை) வரையிலும், சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (தட்கல்) விண்ணப்பிக்க 23.04.2019 மற்றும் 24.04.2019 ஆகிய தேதிகளில்** அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் சேவை மையங்களுக்கு (Government Examinations Service Centres) சென்று ஆன்–லைனில் விண்ணப்பிக்கலாம் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

நடைபெறவுள்ள ஜூன் 2019 பத்தாம் வகுப்பு சிறப்பு துணைப் பொதுத்தேர்வெழுத தேர்வுத்துறையால் அறிவிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட நாட்களில், ஆன்–லைனில் விண்ணப்பிக்கத் தவறிய தனித்தேர்வர்களின் கோரிக்கையினை ஏற்று, தேர்வர்களின் நலன் கருதி சிறப்பு நிகழ்வாக இரண்டாவது முறையாக சிறப்பு அனுமதி திட்டத்தின்(தட்கல்) கீழ் ஆன்–லைனில் விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படுகிறது.

**<u>விண்ணப்பங்களை ஆன்– லைனில் பதிவு செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வு சேவை மையங்கள் (Government Examinations Service Centres):</u>**

**தனித்தேர்வர்கள் ஆன்–லைனில் விண்ணப்பிப்பதற்காக ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் அரசுத் தேர்வுத் துறை சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது. தனித்தேர்வர்கள் தாங்கள் எந்த கல்வி மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்கிறார்களோ, அந்த மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத் துறை சேவை மையத்திற்கு <u>13.05.2019 (திங்கட் கிழமை) மற்றும் 14.05.2019 (செவ்வாய் கிழமை) ஆகிய இருதினங்களில்</u> நேரில் சென்று ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.**

தனியார் Browsing Centre-கள் வழியாக விண்ணப்பிக்க இயலாது. கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்கள் (Service Centres) வழியாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்களின் விவரத்தை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

2...

**<u>தனித்தேர்வர்கள் சேவை மையத்தில் (Service Centre) சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள்</u>**

ஜுன் 2019 பத்தாம் வகுப்பு சிறப்பு துணைப் பொதுத்தேர்வெழுத விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் பற்றிய விவரங்கள், சேவை மையத்திற்கு சென்று விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் போன்ற விவரங்களை www.dge.tn.gov.in என்ற இவ்வியக்கக இணையதளத்தில் விரிவாகக் காணலாம்.

**<u>2. மார்ச் 2019 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு விண்ணப்பித்து, தேர்விற்கு வருகைப்புரியாத / தேர்ச்சிப் பெறாத தேர்வர்கள் தட்கல் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தல் :</u>**

மார்ச் 2019 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு விண்ணப்பித்து தேர்விற்கு வருகைப்புரியத / தேர்ச்சிப் பெறாத தேர்வர்கள் நடைபெறவுள்ள ஜுன்2019 பத்தாம் வகுப்பு சிறப்புத் துணைப் பொதுத்தேர்விற்கு **<u>06.05.2019 பிற்பகல் முதல் 10.05.2019 வரை பள்ளி மாணக்கர்கள் தாங்கள் பயின்ற பள்ளியின் வாயிலாகவும் தனித்தேர்வர்கள் தங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வழியாகவும்</u>** விண்ணப்பிக்கலாம் என ஏற்கனவே அறிவித்த தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் **<u>சிறப்பு அனுமதித் திட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் 13.05.2019 (திங்கட் கிழமை) மற்றும் 14.05.2019 (செவ்வாய் கிழமை) ஆகிய இரு நாட்களில்</u>** தங்களது விண்ணப்பத்தினை பதிவு செய்து கொள்ளவேண்டும்.

மார்ச் 2019 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதியவர்கள் தங்களது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் நகலினையும், தேர்வு எழுதாதவர்கள் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினையும், விண்ணப்பத்தினை பதிவுசெய்யும் அலுவலரிடம் ஒப்படைக்கவேண்டும்.

**தேர்வுக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை :-**

| | | |
|---|---|---|
| 1. | தேர்வுக் கட்டணம் | ரூ.125/– |
| 2. | சிறப்பு அனுமதிக் கட்டணம் | ரூ.500/– |
| 3. | ஆன்–லைன் பதிவு கட்டணம் | ரூ.50/– |
| | **மொத்தக் கட்டணம்** | **ரூ.675/–** |

தேர்வு கட்டணம் ரூ.125/–, கூடுதலாக சிறப்பு அனுமதிக் கட்டணமாக ரூ.500/– மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணமாக ரூ.50/– ஐ பணமாக மட்டுமே அரசு தேர்வுகள் சேவை மையம் / முதன்மைக் கல்வி அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

**<u>தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகள் விநியோகம்</u>**

தேர்வுக் கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். பதிவிறக்கம் செய்ய வேண்டிய நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இணையதளத்தில் வெளியிடப்பட்ட அறிவுரைகளின்படி (தேர்வுக் கட்டண விவரம் தவிர்த்து) வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி அறிந்து அதன்படி விண்ணப்பிக்க வேண்டும்.

தனித்தேர்வர்களுக்கு, தற்போது வழங்கப்படும் அனுமதி முற்றிலும் தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்டப் பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

நாள் : **09 . 05 .2019.**
இடம் : சென்னை–6